செ.வெ.எண்: 50 நாள்:22.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் திட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கப்பெறும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இயற்கை உரம் தயாரிக்கும் தொட்டிகளில் மண்புழுக்களை விட்டு கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு ஊராட்சிகளில் வருமானத்தை பெருக்கும் வகையில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பெருங்களூர் ஊராட்சி, பெருங்களூர் மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியம், அரசம்பட்டி ஊராட்சி, மெய்யப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் தலா ரூ.90000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரண்டு மண்புழு இயற்கைஉரம் தயாரிக்கும் பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன், இயற்கை உரம் தயாரிக்கும் தொட்டிகளில் மண்புழுக்களை விட்டு துவக்கி வைக்கப்பட்டது.

நமது மாவட்டத்தில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முதல் கட்டமாக 74 கிராம ஊராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக 283 கிராம ஊராட்சிகளிலும் செயல்பட்டு வருகிறது. இந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படும் கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 1 ஊராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கொட்டகையில் 6 தொட்டிகள் அமைக்கப்பட்டு மண்புழு இயற்கை உரம் தயார் செய்யும் வகையில் மக்கும் இலை, தளைகள் மற்றும் சாணக்கரைசல் கொண்டு நிரப்பப்படும். 1 தொட்டிக்கு 3 கிலோ மண்புழுக்கள் ரூ.600 மதிப்பில் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மூலம் பெற்று வளர்க்கப்படுகிறது. இதன் மூலம் 30 நாட்கள் கழித்து சுமார் 1 டன் மண்புழு உரம் கிடைக்கப்பெறும்.

மேலும் இவ்வாறு கிடைக்கப்பெறும் மண்புழு இயற்கை உரம் 25 கிலோ பைகளில் அடைக்கப்பட்டு விவசாயிகளுக்கு 1 கிலோ ரூ.7 என்ற வகையில் வழங்கப்படும். இதன் கழிவு நீர் (வெர்மிவாஸ்) மிகச்சிறந்த கிருமிநாசினியாகும். இவை பாட்டிலில் அடைக்கப்பட்டு 1லி ரூ.10 என்ற வகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதனை செடி மற்றும் பயிர்களில் தெளிக்கும் பொழுது பிற பூச்சிகள் தாக்காது. இத்திட்டத்தின் மூலம் கிராமங்கள் தூய்மையாவதுடன் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுவதுடன் வருடம் முழுவதும் ஊராட்சிகளுக்கு வருமானம் வரப்பெறும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருமயம் வேங்கை கண்மாயில் வேலிக்கருவேல மரங்களை அகற்றும் பணியினை பார்வையிட்டு வேலிக்கருவேல மரங்களின் தீமைகள் குறித்து பொதுமக்களிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்.

இந்த ஆய்வின் போது திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ராஜ்குமார், திரு.மதியழகன், திரு.தமிழ்ச்செல்வன், திருமதி.சரோஜா, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**